தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 03.09.2019 ((முற்பகல்)**

**முன்னிலை**

## முனைவர் ரா. பிரதாப்குமார்,

**மாநில தகவல் ஆணையர்**

……………

**வழக்கு எண்.SA3353/F/2019**

திரு எம். லலித்குமார் … மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்/
தனி வட்டாட்சியர் (நிலம் எடுப்பு),
அலகு V அலுவலகம்,
தேசிய நெடுஞ்சாலை எண்.45C.
விக்கிரவாண்டி-கும்பகோணம்-தஞ்சாவூர் பிரிவு,
தஞ்சாவூர் - 613 001. … பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 18.01.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 19.02.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 08.04.2019 |

******

# ஆணை

இன்று (03.09.2019) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு எம். லலித்குமார் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. க.கார்த்திகேயன், தனி வட்டாட்சியர் (நிஎ) அலகு-3, தேசிய நெடுஞ்சாலை எண்.45C, விக்கிரவாண்டி-கும்பகோணம்-தஞ்சாவூர் பிரிவு, தஞ்சாவூர் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 18.01.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், பூதலூர் வட்டம், செங்கிப்பட்டி கிராம புல எண்.43/22, விஸ்தீர்ணம் 0.24.5 ஹெக்டேர்ஸ் புஞ்சை நிலத்தில் 452 சதுர மீட்டர் தேசிய நெடுஞ்சாலை (NH 67) நான்கு வழிப்பாதை அமைக்க கையகம் செய்யப்பட்டுள்ளது என்றும், அதற்குரிய இழப்பீட்டுத்தொகை வழங்கியதற்குரிய தீர்ப்புரை நகல் மற்றும் அந்நிலம் யார் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம், அதற்குரிய உட்பிரிவு ஸ்டேட்மென்ட் நகல், நிலம் கையகப்படுத்தப்பட்டது தொடர்பாக வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட செட்டில்மென்ட் ரிஜிஸ்டர், அடங்கல், கிராம 10(1) கணக்கு (சிட்டா) ஆகியவற்றின் நகல் போன்ற தகவல்களை 3 இனங்களில் குறிப்பிட்டு வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், தனி வட்டாட்சியர் (நிலம் எடுப்பு), அலகு V அலுவலகம், தேசிய நெடுஞ்சாலை எண்.45C, விக்கிரவாண்டி-கும்பகோணம்-தஞ்சாவூர் பிரிவு, தஞ்சாவூர் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை என தெரிவித்து, உரிய தகவல் வழங்கவும் கேட்டு, 19.02.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகு உரிய விசாரணை செய்து தகவல் வழங்கக்கேட்டு, பிரிவு 19(3)ன் கீழ் 08.04.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் தொடர்பாக 23.01.2019 தேதியிட்டு பதிவு தபால் வாயிலாக தகவல் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. மேல்முறையீட்டாளர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகாத நிலையில், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல் சரியான தகவல் என ஆணையம் கருதுகிறது. இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லை என ஆணையம் முடிவு செய்து, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணையை இத்துடன் முடித்து வைக்கிறது.

ஒம்/- **ரா. பிரதாப்குமார்**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.SA3353/F/2019</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
தனி வட்டாட்சியர் (நிலம் எடுப்பு),
அலகு V அலுவலகம்,
தேசிய நெடுஞ்சாலை எண்.45C.
விக்கிரவாண்டி-கும்பகோணம்-தஞ்சாவூர் பிரிவு,
தஞ்சாவூர் - 613 001.

<u>**மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்**</u>
திரு எம். லலித்குமார்,
த/பெ. ஐ.எம்.லால்,
கஸ்தூரி நிவாஸ்,
எண்.23, இரட்டைமால் தெரு,
மங்கள் & மங்கள் அருகில்,
திருச்சி - 620 002.

**Copy to: Judgement File.**

**Spare/ AM/PS-060919**